## தி.மு.க. ஆட்சியில் 25 சட்டமன்ற பெண் உறுப்பினர்கள் இருந்தார்கள்!

# விவசாயக் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்!

## சட்டப் பேரவையில் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானிய விவாதத்தில் – திருவாரூர் பூண்டி கே.கலைவாணன் பேச்சு!

சென்னை, ஆக. 24-

சட்டப் பேரவையில் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் திருவாரூர் பூண்டி கே. கலைவாணன் பேசுகையில் விவசாயக் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் தி.மு.க. ஆட்சியில் 25 பெண் உறுப்பினர்கள் இருந்தார்கள் என்றும் குறிப்பிட்டார்.

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:

திராவிட இயக்கத்தின் தந்தை நடேசனார் அவர்களுக்கும் வெள்ளுடை வேந்தர் சர் பிட்டி தியாகராஜர் அவர்களுக்கும். The Born of the Justice Party டாக்டர் டி.எம் நாயர் அவர்களுக்கும் எம் மண்ணைச் சார்ந்த சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களுக்கும் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்

அறிவுலக ஆசான் தந்தை பெரியார் அவர்களுக்கும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன் எம் மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலிப்

கழகத் தலைவர் திராவிட மாடல் நாயகர் தளபதி அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அன்பிற்கினிய சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் எனது வெற்றிக்கு உழைத்திட்ட திருவாரூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள கழக நிர்வாகிகள் நண்பர்கள் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் நண்பர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, எனக்கு வாக்களித்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்

பேரவைத் தலைவர் அவர்களே கடந்த 3, 4 நாட்களாக தொடர்ந்து பார்த்தோமானால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெருமையைச் சொல்லியிருக்கிறார்கள் ஒரு உதாரணத்தைச் சொல்ல வேண்டுமானால் பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகமாக இருப்பது இன்றைய ஆளுங்கட்சியில்தான் என்று பேசினார்கள் வாழ்த்துகள் அது எனக்கும் மகிழ்ச்சி (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில் ஒருவர் வேட்பாளராக வர வேண்டுமானால் அவர் வாக்காளராக இருக்க வேண்டும். அந்த வாக்குரிமையைப் பெற்றுத் தந்தது திராவிட இயக்கம் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த திராவிட இயக்கத்தின் வழித்தோன்றல்தான் நான் என்னுடைய தந்தையார் நீதிக் கட்சியில் இருந்தவர் (குறுக்கீடு) அந்த வாக்குரிமையைப் பெற்றுத் தந்தது நீதிக் கட்சி திராவிட இயக்கம் வாக்காளர்தான் வேட்பாளராக முடியும் அதனால்தான் அவர்கள் வேட்பாளர்களாகி இன்றைக்கு அதிக எண்ணிக்கையில் பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்கள் மிகவும் மகிழ்ச்சி (குறுக்கீடு)

தற்போது உணவுத் துறை அமைச்சர் அவர் சொன்ன கருத்தில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை எவ்வளவு பேருக்கு உரிமை கொடுக்கிறோம் என்பது மாத்திரம் சட்டமன்ற தேர்தலில் வாய்ப்பை வழங்காது

### வாக்குரிமைக்காக போராடியவர்கள் நீதி கட்சியினர்!

நாங்கள் எத்தனை பெண்களுக்கு வாய்ப்பு கொடுத்தோம் எதிரணியில் நிற்பவர்கள் ஆண்களாக இருந்து ஜெயித்து வந்தார்கள் என்றால் எப்படி அதிக வாய்ப்பு கிடைக்கும் ஏனெனில் இதில் ஒதுக்கீடு என்பது இதுவரைக்கும் இடம்பெறவில்லை.

தொழில் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்கள். மிக்க மகிழ்ச்சி ஏனென்று சொன்னால், இப்போது அதிகமான பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னதில் எனக்கு மாறுபட்ட கருந்து இல்லை. இப்போது இருப்பதில் அதிக பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்கள் ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 25 சட்டமன்ற பெண் உறுப்பினர்கள் இந்த அவையில் இருந்தார்கள். அதை நான் ஆணித்தரமாக பதிவு செய்ய விரும்புகிறேன் அதுமாத்திரமல்ல, அண்ணன் இப்போது பேசினார்கள்

அனைத்து அமைச்சர்களும் வரிசையாக பேசிக் கொண்டிருந்தால் ஒவ்வொன்றுக்கும் நான் பதில் சொல்ல வேண்டும். நான் பேச வேண்டியவை பற்றி பேசுவதற்கு வாய்ப்பிருக்காது இருந்தாலும், நீங்கள் கேட்டதற்கு நான் பதில் சொல்லியாக வேண்டும். நான் என்ன சொல்கிறேன் என்றால் வாக்குரிமையைப் பெற்றுத் தந்தது அம்பேத்கர் நான் மறுக்கவில்லை நீங்கள் சொல்கிற கருத்தில் எனக்கு உடன்பாடு இருக்கிறது. அம்பேத்கர் அந்தச் சட்டம் இயற்றிய காலத்தில் நீதிக் கட்சிகள் இருந்ததா இல்லையா வாக்குரிமைக்குப் போராடியவர்கள் நீதிக் கட்சியைச் சார்ந்தவர்களா இல்லையா? என்பதை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்

அடுத்து இன்னொன்றை நான் சொல்கிறேன் என்னவென்றால் நமது அவை முன்னவர் அவர்கள் நேற்று, நிலவரியை இரத்து செய்வது பற்றி சொன்னார் அதைப் பற்றி நான் பேச வேண்டும் ஏனென்றால் அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கும் அதற்கும் தொடர்பு இருக்கிறது என்பதால் நான் அதைச் சொல்கிறேன் அந்தக் காலகட்டத்தில் நிலவரி கட்டியவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. அந்தக் காலகட்டத்தை அந்த நிலையை மாற்றியது அம்பேத்கர் எழுதிய சட்டம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது நாம் நிலவரியை இரத்து செய்தோம் என்றால் அதில் நடைமுறைச் சிக்கல்கள்நிறைய இருக்கின்றன. அதைப் பற்றி நான் பிறகு பேசுகிறேன் ஏனென்றால் நான் ஒவ்வொன்றுக்கும் விளக்கமாகச் சொல்வது என்னாகும் என்றால். குழந்தைகள் அனைவரும் இப்போது எப்படி இருக்கிறார்கள் என்று கேட்டால் நீ எனக்கு என்ன செய்தாய் நீ எனக்கு என்ன செய்தாய்' என்று அப்பாவைப் பார்த்து கேட்கிறது. எங்கள் ஊரில் கவிஞர் ஒருவர் இருந்தார் எனக்கு என்ன செய்தாய்' என்று அவரிடம் ஒரு பையன் கேட்டான் அவர் கவிஞர் அவர் பாணியில் சொன்னார் என்ன செய்தேனா, என்ன செய்தேனா உன்னையே செய்தேனடா மகனே!" என்று சொன்னார் அது போன்று இன்றைக்கு நாம் அனைவரும் இங்கு உட்கார்ந்திருக்கிற நிலையை உருவாக்கித் தந்தது திராவிட இயக்கம் (மேசையைத் தட்டும் ஒலி)

21 வயதாக இருந்ததை 18 வயதாக மாற்றியவர் இராஜீவ் காந்தியாக இருக்கலாம்



அதில் மாறுபட்ட கருத்து இல்லை அதில் மாற்றம் இல்லை ஆனால் எத்தனை வயதில் வாக்களிக்க வேண்டுமென்பதற்குத் தான் இராஜீவ் காந்தி அவர்களால் தீர்வு வந்ததே தவிர யார் யார் வாக்களிக்கலாம் என்பதற்கும் தீர்வு கண்டது திராவிட இயக்கங்கள் என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு.

### 'நீட்' தேர்வு தேவை இல்லை என்பது தான் தி.மு.க.வின் நிலைப்பாடு!

இதை எதற்காக சொல்கிறேன் என்றால் இன்றைக்கு என்ன செய்தது திராவிட இயக்கம் என்று சொல்லி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் அதற்காகத்தான் நான் இந்த விளக்கத்தைச் சொல்கிற ஒரு சூழ்நிலை வந்துவிட்டது. இன்னும் சொல்லப்போனால் மருத்துவர்கள் நிறைய பேர் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள் அதுவும் எனக்குப் பெருமையான விஷயம் அதற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் அதே நேரத்தில் அந்த மருத்துவப் படிப்புக்கு திராவிட இயக்கம் காலத்தில்தான். நீதிக் கட்சிக் காலத்தில்தான் மருத்துவக் கல்விக்கு மந்திரமொழி எதற்கு என்று கேட்டது திராவிட இயக்கம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையென்றால். இன்றைக்கு எல்லோரும் மருத்துவர் ஆகி இருக்க முடியுமா? மருத்துவர் சௌமியா அன்புமணி அவர்கள்கூட இங்கே இருக்கிறார்கள் அவர்கள்கூட யோசிக்க வேண்டிய விஷயம் இது அதாவது உங்கள் கணவரையே எடுத்துக்கொள்ளுங்கள் ஏனென்றால், மருத்துவக் கல்விக்கு மந்திரமொழி எதற்கு என்று கேட்டது திராவிட இயக்கம் சமஸ்கிருதம் படித்திருந்தால்தான் மருத்துவராகலாம், மருத்துவக் கல்விக்குப் போகலாம் என்று இருந்த நிலையை மாற்றியது திராவிட இயக்கம் அப்படியில்லையென்றால் இன்றைக்கு உங்களிடம் இருக்கிற இத்தனை மருத்துவர்களில் எத்தனை பேர் மருத்துவராக இருக்க முடியும்' இதனை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் அப்போது மருந்துவக் கல்விக்கு மந்திரமொழி எதற்கு என்று கேட்டது போன்று சமஸ்கிருதம் தேவையில்லை' என்று சொன்னது போன்றுதான் இன்றைக்கு எங்களுடைய நிலைப்பாடு NEET தேவையில்லை என்று சொல்கிறோம். அன்றைக்கு சமஸ்கிருதம் என்று வைத்திருந்ததை நாங்கள் முறியடித்தோம். திரும்பவும் அதனை NEET என்னும் வடிவில் கொண்டு வந்துவிட்டார்கள்

### அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி

என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லியிருக்கிறார் அதுபோன்று, நாங்கள் எங்களுடைய ஆட்சிக்காலத்தில் எந்த அளவிற்கு அடித்தட்டு மக்களுக்கு உதவி செய்ய முடியுமோ, அந்த அளவிற்கு உதவி செய்ததால்தான் இன்றைக்கு எங்களிடம் திராவிட இயக்கம் என்கிற ஈர்ப்பு இருக்கிறது. அதாவது, FD மாதிரி அதாவது வழியில்லாதவர்களுக்கு உணவு அளிப்பது என்பது FD-ல் பணம் போடுவது போன்றது என்று சொல்லியிருக்கிறார்கள் வள்ளுவர் சொல்லியிருக்கிறார் நான் சொல்லவில்லை அதே நேரத்தில் வள்ளுவர் இன்னொன்றும் சொல்லியிருக்கிறார்

### உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு

என்று அதுபோன்று நீங்கள் செய்துகாட்டிவிடுங்கள் என்ற ஓர் அன்பான வேண்டுகோளை வைத்துக்கொள்வதுடன் இன்னொன்றும் சொல்கிறேன் உண்மைக்குப் புறம்பானதும் வாய்மையிடத்த புரைதீர்க்கும் நன்மை பயக்கும் எனின் ஏனென்றால் அந்த உண்மைக்கும் புறம்பானது

அன்றைக்கு தஞ்சை மண்டலம் என்பது விவசாய நிலங்களில் செல்வம் கொழித்ததால் இங்கு ஒரு Sunland dem-ருக்கு ஒரு ஏக்கர் என்கிற அளவீடு இருந்தது. அது அந்தந்த பகுதிக்கு தகுந்தவாறு மாறும் அதனால், மிகக் குறைந்த ஒரு நில வரியை அவசியம் நீங்கள் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் மிகக் குறைந்த அளவில் ஒரு ஏக்கருக்கு / ரூபாய் என்றுகூட இருந்தாலும் போதும் மாறுபட்டக் கருத்து இல்லை.

பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதையே நான் திரும்ப பதிலாகச் சொல்கிறேன் எப்படி என்று கேட்டீர்களென்றால், அந்தக் காலகட்டத்தில் அவர்களுக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் இருந்ததனால் நில வரி கட்டிய ரசீதுதான் ஆதாரம் என்று சொல்லியிருந்தார்கள் அந்த காலகட்டத்தில் அதுமாதிரி இருந்த நிலங்களுக்கு இன்றைக்கு எந்த அளவில் இருக்கும்? நிச்சயமாக இருக்காது பூர்விக சொத்துகளுக்கு நிலவரி கட்டியது போன்ற document தான் இருக்கும். அந்தப் பிரச்சினைகள் இருக்கிறது அதைவிட மிக முக்கியமான இன்னும் ஒன்று என்னவென்று கேட்டீர்களென்றால், நில உடைமையாளருக்கு அவருக்கு அவருடைய நிலம் என்பதற்கு என்பது மிக குறைந்தபட்சமான ஒரு தொகையையாவது நிர்ணயிக்க வேண்டுமென்பது என்னுடைய அன்பான வேண்டுகோள்

### குறுவை சாகுபடிக்கு இனி வாய்ப்பில்லை!

விவசாயத்தைப் பொறுத்தளவில் குறுவை சாகுபடி என்பது இனி வாய்ப்பில்லை. சம்பா சாகுபடிக்குதோன் அதற்கும் தண்ணி! எப்போது வரும் என்பதற்கு உத்தரவாதம் இல்லாத ஒரு நிலையில் குறுகிய கால நெல் விதைகளை அமைச்சர் அவர்கள் வாங்கி கொடுக்க வேண்டும் என்கிற அன்பான வேண்டுகோளை நான் வைத்துக்கொள்கிறேன்.

அடுத்து என்னவென்று கேட்டால் இங்கு மருத்துவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொன்னேன் மருத்துவத் துறையில் இன்றைக்கு உள்ள பெரிய பிரச்சினை என்னவென்று கேட்டால் நீரிழிவு நோய் புற்று நோய் இது இரண்டும்தான் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்றன Challenge ஆக இருப்பதே நமக்கு அவைதான். அதற்கு மிகப் பெரிய ஒரு அங்கக வேளாண்மை என்பதுதான் அதனால் இன்றைக்கு உள்ள வற்றில் பள்ளிக் குழந்தைகளுக்கும் கொடுக்கப்படுகின்ற காலை உணவுத் திட்டமாக இருக்கட்டும். மதிய உணவுத் திட்டமாக இருக்கட்டும் அதுபோல, மருத்துவமனைகளில் உள்ளவர்களுக்கு நோயாளிகளுக்குக் கொடுக்கின்ற உணவு. இதற்கு அங்க வேளாண்மையில் விளைந்த அதாவது இயற்கை விவசாயத்தில் விளைந்த நெல்லை அரிசியை தனியாக சிறப்புக் கொள்முதலாக செய்து அவர்களுக்குக் கொடுத்தால்இதற்குக் கூடுதலாக கொடுக்கின்ற செலவு என்பது மருத்துவ செலவில் நமக்கு 100 மடங்கு குறையும் என்கிற அன்பான வேண்டுகோளையும் நான் உங்கள் முன்பு வைத்துக்கொள்கிறேன்

அதேபோல் இந்த குறுகிய கால விதை என்பதைப் பார்த்தீர்களென்றால், இப்போது சம்பாவிற்கு ஆடுதுறை 50 எடுக்கலாம் அது 125 நாட்கள் முதல் 130 நாட்கள் சம்பா இரகம் அதுபோல் வாரங்கள் 139 அதுவும் 130 நாட்கள் உள்ளது. ஏனென்று கேட்டால் CR-2009 எடுத்தோமென்றால் 159 முதல் 260 நாட்கள் அந்த அளவிற்குத் தண்ணீர் கிடைக்குமா? தொடர்ந்து தண்ணீர் வருமா என்கிற மிகப் பெரிய ஒரு பிரச்சினை இருக்கிறது

அடுத்து இன்னொரு முக்கியமான செய்தி என்ன இரக அரிசியா அல்லது மோட்டா இரக அரிசியா? என்பது மிகப் பெரிய அளவில் இருந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் திராவிட மாடல் ஆட்சியில் 80 சதவிகிதம் அரிசியும் 20 சதவிகிதம் மோட்டா இரக அரிசியும் கொடுத்தோம். இப்போது கையிருப்பில் இருப்பதற்குத் தகுந்தாற்போல் அவர்கள் சதவிகிதம் மோட்டா இரக அரிசியும் 20 சதவிகிதம் சன்ன இரக அரிசியும் கொடுக்கிறார்கள்.

உணவு துறை அமைச்சர் அவர்கள் முன்கூட்டிய பதில் சொன்னதால். நான் சொல்ல வந்த Subject-ஐ அவர் புரிந்துகொள்ளவில்லை சன்னரக நெல்லைவிட மோட்டார் நெல் தான் உடலுக்கு நல்ல சத்தானது எவ்வளவு கூடுதலாக நாட்கள் எடுத்துக்கொள்கிறதோ அந்தப் பயிர்தான் நல்லது காட்டுயானம் நெல் 180 நாட்கள் அதுதான் உலகிலேயே நல்ல நெல் ரகம் தற்போது colour ter போட்டதால் ஒரு குவிண்டாலுக்கு கிலோ வரை வருகிறது அதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

### மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி!

தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களில் பல்வேறு சேவைகள் வழங்கும் வகையில் திருத்தியமைத்தது கடந்த கால ஆட்சியில் தற்போது நீங்கள் பல் சேவை மையங்கள் என்று கொடுத்திருக்கிறீர்கள் இது இரண்டிற்கும் என்ன வித்தியாசம் என்பது தெரியவில்லை ஒன்று அடுத்ததாக கடனை உரிய காலத்தில் திருப்பி செலுத்தியவர்களுக்கு வட்டியில்லா கடன் என்பதை கொடுத்திருக்கிறோம் ஆனால், தற்போது நீங்கள் சொல்லியிருப்பது. 17000 கோடி ரூபாய் புதிய கடன் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது அது மாதிரி நீங்கள் தொடர்கிறீர்களா இல்லையா என்பது பற்றி உங்களுடைய குறிப்பில் இல்லை அடுத்தது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உச்சவரம்பு பொறுத்தவரை நாங்கள் ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.30இலட்சமாக மாற்றியிருக்கிறோம் அதனை ரூ.70 இலட்சத்திலிருந்து மாற்றப்படுமா? ஏனென்றால் 1980-91 காலக்கட்டத்தில் மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் கொண்டு வந்த திட்டம் இந்த மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம் அதனால்தான் இதற்கு ஏதாவது கூடுதலாக சேர்த்து தருகிறீர்களா என்று கேட்டுக்கொள்கிறேன் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நாங்கள் கடன் கொடுத்ததை கடந்த 2024-25 ஆம் ஆண்டில் ரூ.4.062 கோடி கடன் கொடுத்திருக்கிறோம் நீங்கள் தற்போது எவ்வளவு என்பது குறித்து இதில் குறிப்பிடப்படவில்லை அடுத்தது மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி நாங்கள் ரூ.2.117 கோடி தள்ளுபடி செய்திருக்கிறோம். அதில் பயனடைந்த பயனாளிகள் என்பது 10,56,258 மகளிர்கள் பயனடைந்தி ருக்கிறார்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான எந்தத் தள்ளுபடி குறித்தும் உங்களுடைய குறிப்பில் இல்லை. ஆகையால் என்ன முடிவில் இருக்கிறீர்கள் என்பதை சொன்னால் பரவாயில்லை அடுத்ததாக மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் அந்தக் கடன்களில் நாங்கள் எங்களுடைய ஆட்சியில் கிட்டத்தட்ட 65 கோடி ரூபாய்க்கு மேல் கடன் கொடுத்திருக்கிறோம் நீங்கள் இதுவரையில் கொடுத்தது 3169 கோடி 10 சதவிகிதத்தை நீங்கள் கொண்டு வந்துவிடுங்கள் என்று சொல்கிறோம். 25 சதவிகிதம் கொடுத்திருந்தால் சரியாக இருந்திருக்கும் தற்போது 10, 15 சதவிகிதத்தில் நிற்கிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது) அதை பார்த்துக்கொள்ளுங்கள் அடுத்ததாக காய் நடை வளர்ப்புக்கு தாங்கள் கொடுத்த கடனைப் பொறுத்தவரை 2004-25 ஆம் ஆண்டு ரூ.2545 கோடி அளவுக்கு நாங்கள் கடன் கொடுத்திருக்கிறோம் ஆனால் நீங்கள் ரூ.345.3 கோடி கடன் கொடுத்திருக்கிறீர்கள் அது 110 சதவிகிதத்திற்கும் குறைவான ஒரு நிலையில் இருக்கிறது எனவே அதனையும் நீங்கள் தயவு செய்து பரிசீலனை செய்ய வேண்டும். நகைக் கடன் தள்ளுபடி நாங்கள் கொடுத்திருக்கிறோம். நீங்கள் இதுவரையில் அறிவிக்கவில்லை. இப்போது இந்தக் கடன் தள்ளுபடி அறிவிப்பில் நகை கடன் தள்ளுபடியில் உண்டா இல்லையா?! அது என்ன என்பது எங்களுக்கு சரியாகத் தெரியவில்லை.

ஒரு whiyumone வேறு ஒன்றுமில்லை கடன் தள்ளுபடியில் இந்த நகைக் கடனும் சேர்த்து வருமா என்பது குறித்து எங்களுக்குத் தெரியவில்லை அதுகுறித்து என்ன முடிவு செய்திருக்கிறீர்கள் என்பது தெரியவில்லை. அறிவித்ததில் உண்டா இல்லையா என்பதை நாம் கூட்டுறவுத் துறை அமைச்சரிடம்தான் கேட்க முடியும் நம்முடைய நகை அவர்களிடம்தானே இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் நீங்கள் இதுமாதிரி குறுக்கே பேசி confer செய்துவிடாதீர்கள்

எதற்காக என்றால் மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பெயரை உச்சரித்ததற்கு அவர் வருத்தம் தெரிவித்தார் (மேசையை தட்டும் ஒலி) இது இந்த 100 நாள் பரிணாம வளர்ச்சி என்று நினைத்து நான் பெருமையாக அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### விவசாயிகளின் தன்னெழுச்சியான போராட்டம்!

அடுத்தது. இன்னொரு நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்னவென்று கேட்டால் முதலில் விவசாயக் கடன் தள்ளுபடி ரூ.35,000 என்று இருந்து அடுத்து ரூ.56.000 ஆக மாறி, அடுத்தது ரூ.25,000 ஆக மாறி. அடுத்தது ஒரு இலட்சம் ரூபாய் வரை கடன் வாங்கியவர்களுக்கு ரூ.75,081 வரை கடன் தள்ளுபடி என்று சொன்னார்கள் எதற்காக அதற்கு நன்றி சொல்கிறேன் என்று கேட்டீர்கள் என்றால், அதற்கு முன்பு இது யார்யாருடைய தூண்டுதலாய்தான் விவசாயிகள் போராடுகிறார்கள் என்று சொன்னவர் யாருடைய தூண்டுதலும் இல்லை விவசாயிகளின் தன்னெழுச்சியான போராட்டம்தான் என்று முடிவு செய்து இந்தளவிற்கு தள்ளுபடியை அறிவித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று என்னவென்று கேட்டீர்கள் என்றால், கூட்டுறவு சங்கங்களில் ரூ.50,000 முதல் ரூ.90000 வரையிலும் தான் கடன் வாங்குவார்கள் ரூ.75,000 கடன் தள்ளுபடி செய்துள்ளீர்கள் அதை ஒரு இலட்சம் ரூபாய் வரை கீழேயுள்ள கடனை முழுமையாக தள்ளுபடி செய்தால். ஒரு நபருக்கு அதிகமாக ரூ.5,000 ரூ.20,000 அதிகமாக செல்லும் அதை மட்டும் செய்து கொடுத்துவிட்டீர்கள் என்றால் பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகமாக காண்பிக்கலாம் அது ஒன்று அடுத்தது என்னவென்று கேட்டீர்கள் என்றால் இதில் பல்வேறு குழப்பங்கள் இருக்கின்றன. கூட்டுறவு கடன் தள்ளுபடியில் விவசாயி களுக்கான கடன் தள்ளுபடியில் கூட்டுறவு சங்கங்களில் வேலை செய்தவர்களுக்கு (குறுக்கீடு)

குடும்பத்தினருக்கு கடன் தள்ளுபடி உண்டா என்பதில் ஒரு குழப்பம் இருக்கிறது அதேமாதிரி கூட்டுறவு சங்கங்களில் இயக்குநர்களாக இருந்தவர்களுக்கு கடன் தள்ளுபடி உண்டா இல்லையா என்பது தர்மசங்கடமான கேள்வியாக இருக்கிறது. அதுமாத்திரமல்லாமல், இன்னொன்று அரசு ஊழியர்களின் குடும்பத்தி னருக்கு விவசாயக் கடன் தள்ளுபடி உண்டா கூட்டுறவுத் துறையை எடுத்துக்கொண்டா உங்களுக்கு தெரியாதது கிடையாது நிறைய com men-சம்பளம் வாங்காமல் வெளியே வந்தவர்கள் எல்லாம் நிறையபேர் இருக்கிறார்கள். ஏனென்றால் கூட்டுறவு சங்கங்களின் நிலை அந்த மாதிரி இருந்திருக்கும். அப்படியெல்லாம் வந்தவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் அதனால் அவர்களுக்கெல்லாம் தள்ளுபடி செய்யாமலிருந்தால் மிகப் பெரிய பாவம் அடுத்து, கடந்த காலங்களில் யார்யார் கூட்டுறவு சங்க இயக்குநர்கள் என்று அவர்களுக்கே தெரியாமல் அவர்களுடைய பெயர் வந்துவிட்டது.

அதுமாதிரி அவர்களுக்கும் இந்த கடன் தள்ளுபடி கிடைக்கவில்லை என்றால் அது எவ்வளவு பெரிய சங்கடம் என்பதையும் தயவு செய்து இந்த அரசுக்கு சொல்லி முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி ஓட்டுமொத்தமாக ஒரு இலட்சம் வரைக்கு கீழேயுள்ள கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற அன்பான வேண்டுகோளை வைத்து இவ்வளவு நேரம் நீங்கள் உட்கார்ந்ததற்கு உங்களுக்கு தனியாக ஒரு நன்றி நீங்கள் விட்டுச் சென்றிருந்தால் எங்களுக்கு 60 எல்லாம் கொண்டு வரமுடியாது அதனால் மீண்டும் மீண்டும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு பூண்டி கலைவாணன் பேசினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திமிரி நா. சீனிவாசன்
### ஆகஸ்ட் 24 (2018)



தனது இளம் வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக திமிரி ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் அ.மு. அசன் முகம்மது
### ஆகஸ்ட் 24 (2016)



இளம் வயதிலேயே திராவிட இயக்கத்தின்மீது பற்று கொண்டு, மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட வழக்கறிஞர் அணி புரவலர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

கவிதை, கட்டுரை எழுதுவதில் வல்லவரான இவர், மிசா நெருக்கடி காலத்தில், கழக நாளேடான 'முரசொலி'யில் துணை ஆசிரியராக பணியாற்றியவர்.

திருவாரூர் மாவட்டம், அத்திக்கடை ஊராட்சி துணைத் தலைவராக பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் முதல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**